මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2017.12.22

**அரச கணக்குகள் சுற்றுநிருப இல. : 263/2017**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்

**காலாண்டு அடிப்படையில் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினை திட்டமிடுதலும் செயற்படுத்தலும்**

வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளை முறையாகப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தும் வகையில் 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் 2018 ஆம் நிதியாண்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கமைவாக அனைத்து செலவின முகவர்களும் செயற்படுத்த வேண்டிய செலவின திட்டங்களை காலாண்டின் அடிப்படையில் தயாரிக்க வேண்டியது கட்டாயமாகும்.

02. இதற்கமைவாக, அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கான காலாண்டு கட்டு நிதியினை விடுவிப்பதற்கு பொதுத்திறைசேரிக்கு இயலுமான வகையில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் என்பவற்றினை காலாண்டின் அடிப்படையில் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் தமது வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும்.

03. 2018 ஆம் ஆண்டுக்கும் அதற்குப் பின்னருமான அர்ப்பணிப்புகள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்களை பதிவு செய்வதற்கு முடியுமான வகையில் சிகாஸ் முறைமையினை நவீன மயப்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை அரச கணக்குகள் திணைக்களம் ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகையில், பின்வரும் நடைமுறைகள் அனைத்து செலவின முகவர்களினாலும் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(அ) ஒதுக்கீட்டுச் சட்டத்தின்கீழ் 2018 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் செலவின தலைப்புகளின் கீழ் உப அலகுகளாக உரிய கவனம் செலுத்தும் வகையில் தமது செயற்பாட்டுத் திட்டத்தினை நான்கு (04) காலாண்டின் அடிப்படையில் உப வகுதிகளாக பிரித்தல் வேண்டும். உரிய முகவர்களினால் தயாரிக்கப்பட்ட காலாண்டு மதிப்பீடுகள் 2018 இன் ஆரம்பத்திற்கு முன்னர் சிகாஸ் முறைமையினூடாக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுதல் வேண்டும். காலாண்டு செலவின மதிப்பீடானது www.newcigas.treasury.gov.lk என்ற இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும். தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது ஒவ்வொரு செலவினத் தலைப்பினதும் காலாண்டு மதிப்பீடுகளை சிகாஸ் மூலம் பதிவேற்றப்பட்ட தகவல்கள் மற்றும் உத்தேச திருத்தங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்படும்.

(ஆ) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைத்களத்தினால் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை அரச கணக்குகள் திணைக்களம் பதிவேற்றம் செய்யும்.

(இ) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட காலாண்டு மதிப்பீட்டின் அடிப்படையிலும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட சிகாஸ் முறைமை மூலமும் செலவின முகவர்கள் ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் தமது தேவையான கட்டுநிதியினை எதிர்வு கூறும் அதேவேளை, அதே இணையத்தளத்தின் மூலம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

(ஈ) எதிர்வு கூறப்பட்ட கட்டுநிதி தேவைப்பாடுகள் மற்றும் செலவின தலைப்புகளின் வருடாந்த கட்டுநிதி வரையறை என்பவற்றைக் கவனத்திற் கொண்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஒவ்வொரு காலாண்டிற்குமான ஆகக் கூடிய காசு வரையறையினை தீர்மானிக்கும். அத்துடன், அரச கணக்குகள் திணைக்களம் சிகாஸ் முறைமையினை அதற்கேற்ற வகையில் இற்றைப்படுத்தும்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் கட்டுநிதி வரையறைக்குள் செயற்படுவதற்குள் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு போதிய சுதந்திரம் காணப்படுகின்றது. ஏதேனும் வரையறை திருத்தங்கள் தேவைப்படுமாயின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் என்பவற்றின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். அவ்வாறு தொடர்ந்து பெறப்படுகின்ற அங்கீகாரமானது அரச கணக்குகள் திணைக்களத்தினால் சிகாஸ் இற்கு இற்றைப்படுத்தப்படும்.

(ஊ) 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக 2018 இலிருந்தும் அதன் பின்னரும் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குள் காலாண்டு அடிப்படையிலும் கட்டுநிதி வரையறைக்கு அமைவாகவும் அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புகள் என்பன சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

04. இந்த நடைமுறை தொடர்பான மேலதிக தெளிவுகளை அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து (திரு.ஏ.பி.குரும்பலபிட்டிய) பெற்றுக் கொள்ள முடியும். (தொலைபேசி இல. 0112484753)

**ஒப்பம்: ஏ.ஆர்.தேசபிரிய**

**திறைசேரியின் பிரதிச் செயலாளர்**

பிரதிகள்:

01. கணக்காய்வாளர் நாயகம்
02. பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
03. பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

(02, 03) அரச கணக்குகள் திணைக் களத்துடன் ஒருங்கிணைந்து சிகாஸ் செயன்முறைக்கான அங்கீகாரம் வழங்குதல்.